விலை ரூபா 6-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 புரட்டாதி 26 இதழ் 251
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 13 - 10 1995

## ★ கொழும்பின் பாதுகாப்பு என்றுமில்லாதவாறு அதிகரிப்பு

(கொழும்பு)

கொழும்பில் என்றுமில்லாத அளவிற்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் எந்த நிலைமையையும் சமாளிக்கும் விதத்தில் படையினர் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக பிரதி பொலிஸ்மா அதிபர் கொட்டகதெனியா தெரிவித்துள்ளார்.

இதேவேளை கொழும்புநகர் எங்குமே பெரும் போருக்குத் தயாராய் நிற்பதுபோல் படையினர் நகரெங்கும் குவிக்கப்பட்டு ரோந்து நடவடிக்

(6ம் பக்கம் பார்க்க)

## அரச வைத்தியர்கள் இன்று முதல் வேலைநிறுத்தம்?

(கொழும்பு)

தமது கோரிக்கைகளை அரசு இன்று நண்பகல் 12 மணிக்கு முன் நிறைவேற்றுவிடில் வேலை நிறுத்தத்தில் குதிக்கப் போவதாக அரச வைத்தியர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

பத்து அம்சக் கோரிக்கையை முன்வைத்த வைத்தியர் சங்கம் விதித்த காலக்கெடு இன்று நண்பகல் 12 மணியுடன் முடிவடைகிறது. அதன் பின் நாட்டிலுள்ள சகல அரச வைத்தியர்களும் வேலை நிறுத்தத்தில் குதிப்பரெனவும் அறிவித்துள்ளது.

வேலை நிறுத்தத்தில் இறங்க

(6ம் பக்கம் பார்க்க)

## ★ தமிழ் மக்களுக்கு எதிரான

# இராணுவத் தாக்குதலை நிறுத்தி

# புலிகளுடன் மீண்டும் பேசுங்கள்

## ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

அரச படைகள் தற்போது மேற்கொள்ளும் இராணுவத் தாக்குதல்களை நிறுத்தி வழமையான சூழலை ஏற்படுத்துவதுடன் தமிழர் பிரச்னைக்கான அரசியல் தீர்வுக்கு விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தையைத் தொடங்குமாறு கோரி யாழ்ப்பாணத்திலுள்ள கலைஞர்கள், எழுத்தாளர்கள், புலமையாளர்கள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளனர்.

அக்கடிதத்தில் மேலும்தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

யாழ்ப்பாணத்தில் கலைஞர்கள், எழுத்தாளர்கள், புலமையாளர்களாகிய நாம் 22-9-95 அன்று வடமராட்சி நாகர் கோவிலில் நடந்த நாற்பது பாடசாலைக் குழந்தைகளின் மரணத்தினால் திகைப்படைந்துள்ள நிலையில், அரசியல்தீர்வு பற்றிய எவ்விதகுறிப்புமின்றி பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் மீது பலத்த தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டிருக்

(5ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி நோக்கி ஷெல் வீச்சு குடும்பஸ்தர் பலி; பெண் படுகாயம்

(நெல்லியடி)

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்றுப் பிற்பகல், வடமராட்சிப் பகுதி நோக்கி ஏவிய எறிகணை வீச்சினால் படுகாயமடைந்த ஒரு குடும்பஸ்தர் மந்திகையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார், மற்றொரு வயோதிப மாது படுகாயமடைந்தார். பல கால்நடைகள் உயிரிழந்தன

நேற்று பிற்பகல் 2-15 மணிக்கு இவ் எறிகணைகள் உடுப்பிட்டி வீரபத்திரர் கோவிலடி

(6ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சிப் பகுதியில் பள்ளிச் சிறுர்கள் கொல்லப்பட்டதற்கு 'யுனெஸ்கோ' பலத்த கண்டனம்

(பாரிஸ்)

வடமராட்சியின் அண்மையில் நாகர்கோவில் பாடசாலை மீது புக்காரா விமானம் கொடூரத் தாக்குதலை நடாத்தி அதில் 25 பள்ளிச் சிறுர்களை படுகொலை செய்த சம்பவத்தை ஐ நா. வின் 'யுனஸ்கோ' அமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது குறித்த கண்டன அறிக்கையொன்றை 'யுனஸ்கோ'வின் தலைவர் கடந்த

(6ம் பக்கம் பார்க்க)

## தென் ஆபிரிக்காவின் முறையில் இலங்கைப் பிரச்னையை தீர்க்கலாம்

(கொழும்பு)

இலங்கைப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு தென் ஆபிரிக்காவை முன் மாதிரியாக எடுத்துக் கொள்ள முடியும் என்று தென் ஆபிரிக்க பிரதிச் சபாநாயகர் கலாநிதி பத்ராரம் கொட் கூறியுள்ளார்.

கொழும்பு வந்துள்ள அவர் இதுபற்றி மேலும் கூறுகையில்; தென் ஆபிரிக்கா அனுபவித்த இன்னல் போன்ற வரலாறு; இந்த நாட்டிற்கு இல்லை. இந்த நாட்டின் பிரச்

(6ம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரை தாக்க படையினர் திட்டம்!

(கொழும்பு)

யாழ். நகரை எந்த நேரத்திலும் தாக்க அரச படைகள் திட்டமிட்டுள்ளதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்துள்ளது.

வெரித்தாஸ் மேலும் கூறுகையில்: இதுவரை யாழ்ப்பாணத்தில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளை மட்டுமே தாக்கி வந்த இராணு

(6ம் பக்கம் பார்க்க)

## டக்ளஸ் கொலை முயற்சி விசாரணை நடாத்த 200 பொலிஸார் நியமனம்

(கொழும்பு)

ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவின் இல்லம் மீது அண்மையில் நடாத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான விசாரணைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக கொழும்பு பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் எச். எம். ஜி பி. கொட்டகதெனியா தெரிவித்துள்ளார்.

(6ம் பக்கம் பார்க்க)

## தமிழீழ பொ. க. தேர்வில் 13 மாணவர்கள் 8 'டி'யை பெற்றனர்

(கட்டுக்கோட்டை)

1995ம் ஆண்டுக்கான தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வில் 5பாடசாலை மாணவர்கள் 13 பேர் 8 டியைப் பெற்றுள்ளனர்.

இப்பெறுபேறுகளின் படி வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள் 4 பேரும்' சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவிகள் 4 பேரும் சென் ஜோன்ஸ் கல்லூரி மாணவர்கள் 2 பேரும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் 2 பேரும், கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மாணவர் ஒருவருமாக மொத்தம் 13 பேர் 8 டியை பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை யாழ். குடாநாட்டுக்குரிய தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வுப் பெறுபேறுகள் இன்று வெள்ளிக்கிழமை தேர்வுப் பகுதியால் வெளியிடப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர்கள் தங்களது பாடசாலைக்குரிய பெறு

(6ம் பக்கம் பார்க்க)

### மாணவருக்கு

"ஈழநாடு" ஒவ்வொரு சனிக்கிழமையும் மாணவர்களுக்கான பக்கங்களுடன் வெளிவரவுள்ளது.

பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் வினாவிடை, கல்விப் பொதுத் தராதர சாதாரண, உயர்தர மாதிரி வினாக்கள் இன்னும் கல்வியியல் கட்டுரைகளுடன் வெளிவருகின்றது. 14-10-95 முதல் உங்கள் பிரதிக்கு முகவர்களிடம் பதிவு செய்து கொள்ளுங்கள்.

## வரி விளம்பரம்

### ரி. வி, றேடியோ உதிரிப்பாகங்கள்

சகலவிதமான T: V, Radio அவற்றின் I C, அவற்றின் உதிரிப்பாகங்கள், அன்ரனு, பூஸ்ரர் மற்றும் உதிரிப்பாகங்கள், பலவித கல்குலேற்றர், பற்றறிகள், வீடியோ, ஓடியோ கசற் வகைகளையும் நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம். அன்ரனு பொருத்திக் கொடுக்கப்படும். புதிய நகர பல்பொருள் வணிக நிலையம் (நியூ சிற்றி றேடர்ஸ் 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.)

(ஏ-5369)

### இன்று
(அரியாலை)

யாழ் - புனித - மரியாள் பேராலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 6-30 மணிக்கு யாழ் ஆயர் கலாநிதி தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகை தலைமையில் உறுதி பூசுதல் விழா நடைபெறவுள்ளது. 59

### பரிசளிப்பு விழா
(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரால் நடாத்தப்பட்ட சைவநெறி தேர்வுப் பரீட்சைக்குத் தோற்றி வெற்றி பெற்றவர்களுக்கான பரிசு வழங்கும் வைபவம் நாளை மறுதினம் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும். 162-சி

## விசேட கலந்துரையாடல்

சகல துறை வணிக நிலைய உரிமையாளர்களுக்கும், ஊழியர்களுக்குமான விசேட கலந்துரையாடல்

இடம்: யாழ். இந்துக்கல்லூரி
பிரார்த்தனை மண்டபம்

காலம்: 13-10-95 வெள்ளிக்கிழமை

நேரம்: பிற்பகல் 3.00 மணி

தற்போதைய போர்க்கால சூழ்நிலையை விளங்கப்படுத்தியும், அதற்கேற்ப எம்மை தயார் படுத்தும் விதம் பற்றியும் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்ற உள்ளதால் சகலரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

குறிப்பு: சகல வணிக நிலைய உரிமையாளர்கள் வரவு பதிவில் எடுக்கப்படும்.

— யாழ் வணிகர் கழகம்

(எ 5386)

## தொழிநுட்பக் கல்லூரி
### பகுதிநேர விரிவுரையாளர்கள் 1996.

யாழ்ப்பாண தொழிநுட்பக் கல்லூரியில் 1996-ம் கல்வியாண்டிற்குரிய பகுதிநேர விரிவுரையாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன; பகுதிநேர விரிவுரைகளுக்குரிய பாடங்களையும், மாதிரி விண்ணப்ப படிவத்தினையும் கல்லூரி நாட்களில் கல்லூரி விளம்பரப் பலகையில் பார்வையிடலாம். முடிவு திகதி 03 - 11 - 1995.

க. ஜெயரத்தினம்
அதிபர்

தொழிநுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
1995 - 10 - 10.

(ஏ-5383)

நீர்வேலி
## தேன்துளி இனிப்பு தொழிற்சாலை
## ஊழியர் கவனத்திற்கு

மேற்படி தொழிற்சாலை. தற்போது கோப்பாயிலுள்ள சுரபித் தொழிற்சாலைக் கட்டிடத்தில் இயங்கவுள்ளது. எனவே மேற்படி தேன்துளி இனிப்புத் தொழிற்சாலை ஊழியர்கள் அனைவரும் 14-10-95ம் திகதி சனிக்கிழமை காலை 0-30 மணிக்கு முன் சுரபித் தொழிற்சாலைக்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பொது முகாமையாளர்,
உணவு பதனிடல் பகுதி,
த. பொ. மே. நிறுவனம்.

சுரபித் தொழிற்சாலை.
கோப்பாய்.

(எ 5385)

தமிழீழ வைப்பகம்
BANK OF TAMILEELAM

# தமிழீழ வைப்பகம்
# பணிநிலை வெற்றிடம்

பின்வரும் பணிநிலைகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் (விண்ணப்பங்கள்) கோரப்படுகின்றன. வேண்டுகைகளை தமிழீழ வைப்பகத்தின் சகல கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். வேண்டுகைகள் வேண்டுகையரின் கையெழுத்தில் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

### 01. அலுவலர் (பயிலுனர்)

தகைமைகள்:
பல்கலைக்கழக சிறப்புப் பட்டதாரிகள் அல்லது பட்டயக்காரர் இடைநிலைத் தேர்வில் தேர்ச்சி அடைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

ஊதியத் திட்டம்:
1800 - 5800
........................ + 2700 (4500 - 8500)
(100X10) (150X20)

அகவை எல்லை: 22 – 30

### 02 மேற்பார்வையாளர் (பயிலுநர்)

தகைமைகள்:
ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

ஊதியத் திட்டம்:
1300 - 3300
........................ + 2700 (4000 - 6000)
(100X20)

அகவை எல்லை: 22 – 30

### 03. இளநிலை எழுதுநர் / உதவிக்காசாளர்

தகைமைகள்:
க. பொ. த. (சாதாரண) தேர்வில், தமிழ், கணிதம் உட்பட 5 திறமை சித்தியுடன்குறைந்தது 06 பாடங்களில் ஒரே அமர்வில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன், க பொ.த. (உயர்தர) தேர்வில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

ஊதியத் திட்டம்:
900 - 1900
........................ + 2700 (3600 - 4600)
(50 X 20)

அகவை எல்லை: 19– 30

### 04. தட்டெழுத்து - சுருக்கெழுத்தாளர் (தமிழ்)

தகைமைகள்:
க. பொ. த. (சாதாரண) தேர்வில் கணிதம், தமிழ், தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆகிய பாடங்களில் திறமைத் தேர்ச்சியுடன் குறைந்தது 6 பாடங்களில் ஒரே அமர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். க. பொ. த. (சாதாரண) தேர்வில் தட்டெழுத்து, சுருக்கெழுத்துப் பாடத்தில் தேர்ச்சி இல்லாதோர் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தொழில்நுட்பக் கல்லூரியினால் நடாத்தப்பட்ட தட்டெழுத்து, சுருக்கெழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

ஊதியத் திட்டம்:
900 - 1900
.............. + 2700 (3600 - 4600)
20 X 50

அகவை எல்லை: 19 – 25

### 05. சிற்றூழியர் - ஆண்

தகைமைகள்:
க. பொ. த. (சாதாரண) தேர்வில் குறைந்தது ஒரே அமர்வில் கணிதம், தமிழ் உட்பட 6 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

ஊதியத் திட்டம்:
500 - 1300
.............. + 2700 (3200 - 4000)
40 X 20

அகவை எல்லை: 19 - 25

வேண்டுகைகள் யாவும் 05-11-95இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக இடது பக்க மேல் மூலையில் பணிநிலை வேண்டுகை எனக் குறிப்பிடப்பட்டு நேரில் அல்லது தபால் மூலம் பணிப்பாளருக்கு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல்வேண்டும்.

பணிப்பாளர்,
தமிழீழ வைப்பகம்,
கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

(எ 5379)

### மணிவாக்கு

உன்னை நீயே பலவீனன் என்று நினைத்துக் கொள்வது மிகப் பெரிய பாவம். உன்னை விட உயர்ந்தவர் யாரும் இல்லை.

— சுவாமி விவேகானந்தர்

# 300 ரவைகள் 16 ஜே.ஆர். குண்டுகள் மூலம் டக்ளஸ் வீடு தாக்கப்பட்டது!

(கொழும்பு)

டக்ளஸ் தேவானந்தாவின் வீட்டில் தாக்குதல் நடத்தியவர்கள் சுமார் 300 ரவைகளையும், 16 ஜே. ஆர். ரகக் குண்டுகளையும், உபயோகித்து இருக்கிறார்கள் என ஈ. பி டி. பி. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஏ. கே. 47 ரகத் துப்பாக்கிகள் ஆகியவற்றின் வெற்றுத் தோட்டாக்கள் ஏராளமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவைகள் அனைத்தும் இரசாயனப் பகுப்பாய்வாளர்களிடமும், பொலிஸாரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

வெடிக்காமலிருந்த 6 ஜே. ஆர். ரக கைக்குண்டுகளையும், பாதுகாப்புப் படையினர் ஏற்கனவே வெடிக்க வைத்துள்ளனர்

தாக்குதல் நடத்தியவர்கள் கிரனைட் ஏவும் புதுவகையான ஆயுதம் ஒன்றையும் பயன்படுத்தியுள்ளனர். இது மிகவும் அபாயகரமான ஆயுதம் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்த ஆயுதத்திற்குப் பாவிக்கும் குண்டின் கவசமும் அங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கே-ரி

## நமது நோக்கு

### கொழும்பில் பாதுகாப்பு

தமிழ்க் கட்சிகளுக்கு அரசாங்கம் வழங்கியுள்ள பாதுகாப்புக் குறித்து நம்பிக்கை இழந்துள்ளதாகவும் இன்று கொழும்பில் யாருக்கும் பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் புளொட் அமைப்பின் செயலாளர் கவலைகொள்கிறார். அரச ஆதரவோடு உதிரித் தமிழ் அமைப்புகள் கொழும்பில் உள்ள தமிழர்களை ஏன் சிங்களவர்களைக் கூட எத்தனையோ இன்னல்களுக்கு உள்ளாக்கி வந்தமை எல்லோரும் அறிந்த விடயம். அரசின் கையாட்களாக இருக்கும்வரை அதன் ஆதரவும் பாதுகாப்பும் இச்குழுக்களுக்கு இருக்கும். அவர்கள் தாங்களாக கொஞ்சம் ''பெருமனிதர்'' களாக இயங்கி அரசுக்கு நியாயம் கூற வெளிக்கிட்டால் அல்லது தங்கள் பலத்தை அரசுக்குக் காட்ட எத்தனித்தார்களேயானால் சிங்கள அரசுகள் இவர்களைத் தமிழர்களின் பட்டியலில் சேர்த்து தமிழர்களுக்குச் செய்யும் அட்டூழியங்களை இவர்களுக்கும் செய்யும்.

சமீபத்தில் தீர்வுத் திட்ட யோசனைகள் சம்பந்தமாக சிறு அதிருப்திகளைச் சொல்ல உதிரித் தமிழ்க்குழுக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டன. ஏற்கனவே தேசத்துரோகிகள் என்று தமிழ் மக்களால் நாமம் சூட்டப்பட்ட இக்குழுக்கள் தமிழர்களுக்கு எதுவித நன்மைகளையும் உண்டாக்க முடியாத மேலும் திருத்தப்பட்ட தீர்வுத் திட்ட யோசனைகளை ஒருவித ஆட்சேபனையுமின்றி ஆதரித்தால் மக்கள் தங்களை முற்றாக ஒழித்துக்கட்டிவிடுவார்கள் என்ற பயத்தில் சிறு ஆட்சேபனைகளை எழுப்பினார்கள். இதைஅரசு விரும்பவில்லை. அண்மையில் நடைபெற்ற அவசரகால நீடிப்பு மசோதா வாக்குக்கு விடப்பட்டபோது உதிரித் தமிழ்க்குழுக்களின் பிரதிநிதிகள் அரசுக்கு சார்பாக வாக்களிக்காமல் நடுநிலை வகித்தனர். அரசு இந்த ''துரோக''ச் செயலைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்குமா! பாடம் படிப்பிக்கத்தானே செய்யும். நாடாளுமன்றப் பிரதிநிதிகளுக்கு உயிர்ப்பாதிப்பு இல்லாமல் பாடம் இப்போது படிப்பிக்கப்பட்டுள்ளது. இனிமேல் அரசின் விருப்பப்படி நல்ல பிள்ளைகளாக நடந்தால் கொழும்பில் பாதுகாப்பாக வாழலாம்.

காலித் துறைமுக ஒப்பந்தம் சம்பந்தமாக நடந்த ஊழல்களுக்கு எம். எச். எம். அஷ்ரப்தான் பொறுப்பு என்று கூறி அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை இந்த மாதத்திலேயே சூட்டோடு சூடாக நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை ஐ.தே. கட்சியினர் செய்துவருகின்றனர். இந்தநிலையில் காலித் துறைமுக ஒப்பந்தத்தை அரசு ரத்துச் செய்தால் தான் பதவி விலகப் போவதாக அஷ்ரப் கூறியுள்ளார். அவர் பதவிவிலகுவதென்றால் அவரது முஸ்லிம் காங்கிரஸ் அரசுக்கு ஆதரவுவழங்குவதைநிறுத்திக்கொள்ளும். அதனால் அரசுக்கு அரசியல் நெருக்கடி ஒன்று ஏற்படும். இந்த நிலையில் உதிரித் தமிழ் குழுக்களும் அரசை ஆதரிக்காது விடின் நாடாளுமன்றம் கலைக்கப்படும்.

நாடாளுமன்றம் கலைக்கப்படுவதையும் புதிய தேர்தல் நடைபெறுவதையும் சந்திரிகா அரசு விரும்பமாட்டாது பொதுத்தேர்தல் ஜனாதிபதித் தேர்தல்களின் போது சந்திரிகாவும் பொதுசன ஐக்கிய முன்னணியினரும் சிங்கள மக்களுக்கு பல வாக்குறுதிகளைக் கொடுத்திருந்தனர் ஜனாதிபதி முறையை ஒழிப்போம் யுத்தத்தை நிறுத்தி அரசியல் தீர்வொன்றை கொண்டு வருவோம், யுத்தச் செலவுகளை நிறுத்தி அபிவிருத்திக்கு செலவிடுவோம் என்றெல்லாம் வாக்குறுதி கொடுத்திருந்தனர். ஆனால் இவ் வாக்குறுதிகளில் ஒன்றைக்கூட ஒரு வருடத்திற்கு மேலான கால ஆட்சியில் அரசு நிறைவேற்றவில்லை. அதற்குமாறாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களைப் பாவித்து மக்களின் அபிலாசைகளுக்கு எதிரான ஆட்சியை சந்திரிகா அரசு செய்கிறது. யுத்தத்திற்கு முன் எப்போதுமில்லாதவாறு மிகப்பெருமளவில் செலவுகளைச் செய்து தமிழ் மக்கள் மீது இனப்படுகொலையை கட்டவிழ்த்து வருவது மாத்திரமல்லாமல் சிங்களச் சிப்பாய்களையும் சாகடிக்கிறது. ஆகவே ஒரு தேர்தல் நடக்குமானால் சிங்கள மக்கள் சந்திரிகா அரசை மண்கவ்வச் செய்து விடுவார்கள் என்பது சந்திரிகாவுக்குத் தெரியும்.

புதிய தேர்தல் நடத்தாது அரசைக்கொண்டு நடத்துவதற்கு எந்த வழிவகையைக் கையாளலாம்? ஒரு விபத்துச் சம்பவத்தால் நாடாளுமன்றுக்கு தெரிவு செய்யப்பட்ட உதிரித் தமிழ் குழுக்களும் புதிய தேர்தல் நடைபெற்றால் தாம் திரும்பவும் தெரிவுசெய்யப்படமாட்டோம் என்பதை அறிவார்கள். அவர்கள் அரசு கவிழ்வதை விரும்பமாட்டார்கள். ஆனால் அரசு அவர்களின் நிபந்தனை அற்ற, தட்டிக்கேட்காத ஆதரவைத்தான் விரும்புகிறது. கொழும்பில் உதிரிக்குழுக்களுக்குள்ள பாதுகாப்பு இப்போது கேள்விக்குரியதான நிலைமை தோற்றுவிக்கப்பட்டுள்ளதால் அவர்கள் சந்திரிகா அரசை நிபந்தனை அற்ற வகையில் ஆதரிப்பர் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.




## திருவாசகம்

வான்கலந்த மாணிக்க வாசகரின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே.

— இராமலிங்க சுவாமிகள்.

திருநெறியெனப் போற்றப் பெறுவதாகிய சைவ சமயத்தின் உயர் நிலையையும், இறைவன் இயல்பையும், அவன் அடியார் பெருமையையும் தெளிவாக விளக்குவன பன்னிரு சைவத் தமிழ்த் திருமுறைகளாம். பன்னிரு திருமுறைகளுள் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்துள்ள திருவாசகமும், திருச்சிற்றம்பலக் கோவையாரும் எட்டாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

திருவாதவூர் செழுமறை முனிவராகிய மாணிக்கவாசகப் பெருந்தகையார் அருளிச் செய்த திருவாசகம் எனும் தேன், நமது ஊனினை உருக்குவது; உள்ளொளி பெருக்குவது; உலப்பிலா ஆனந்தமாகிய தேனினைச்சொரிவது; உள்ளகந் ததும்ப வாக்கிறந்தமுதம் மயிர்க்கால் தேக்கிடச் செய்வது. என்புத் துளைதொறும் பாய்ந்து நிரம்புவது; நினைத்தொறும் காண்தொறும் பேசும்தொறும் எப்போதும் அனைத்தெலும்புள் நெகப் பேரின்பத்தைப் பிலிற்றுவது.

திருவாசகத்தின் பெருமை அளவிடற்கரியது. ''திருவாசகத்திற் குருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்'' என்ற பழமொழியே இதன் இயல்பினைத் தெளியக் காட்டும்.

கல்நெஞ்சையும் உருக்கும் கனிவிலும், கண்ணுதற் பெருமான் கருணைக்கு நம்மை ஆளாக்கும் பான்மையிலும் திருவாசகத்திற்கு ஈடு திருவாசகமே பன்னிரு திருமுறையுள்ளும் தில்லைக் கூத்தப்பெருமானால் ஏடும். எழுத்தாணியும் கொண்டு எழுதப்பெற்ற தனிச் சிறப்புமாணிக்கவாசகருடைய எட்டாந் திருமுறைக்கே உரியது.

கிறீஸ்தவ பாதிரியான டாக்டர் ஜி யு போப் ஐயரைத் தன்பால் ஈர்த்ததும் அல்லாமல், அவர் உள்ளத்தை உருக்கிச் சமய நூலாகிய இதனை ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கத் தூண்டியது இத் திருவாசகமே. மனங் கலந்து மலங் கெடுப்பதில் திருவாசகம் தன்நிகரில்லாத் தனிச் சிறப்பு உடையது. இத்தகைய தெய்வத் திருவருள் நூலினை அருளிச் செய்த மாணிக்கவாசகர் பெருமை சொல்லில் அடங்குவது அன்று. 4 வகை நெறிகளுள் ஞான நெறியாகிய சன்மார்க்க நெறியில் நின்றவர் மாணிக்கவாசகர்; ''அறிவாற் சிவனே'' என்று மெய்யுணர்ந்தோரால் போற்றப்படுபவர். திருவாசகத்திற்கு வாக்கியப் பொருள் தில்லைக் கூத்தனே என்று சொல்லி யாவரும் காண, இறைவனோடு சிற்றம்பலப் பேரொளியில் இரண்டறக் கலந்தவர்; வாதவூரினில் பாதச் சிலம்பொலி கேட்டுத் திருப்பெருந்துறையில் குருந்தமர நிழலில் திருவைந்தெழுத்தைக் கேட்டு திருவடி சூட்டப் பெற்று, கோலமார்தரு தில்

(5ம் பக்கம் பார்க்க)

## எமக்கு நாமே!

மானிட வாழ்க்கை ஆனது மனத்தில் உள்ள எண்ணங்கள் போலவே அமைந்து விடுகின்றது. என்பது ஞானிகளினதும், சமூக விஞ்ஞானிகளினதும் முடிபு. மனிதர்கள் தமது சுகமான வாழ்விற்காக பல வகையான எண்ணங்களை மனதினில் தேக்கி வைத்திருக்கிறார்கள். இவற்றில் எல்லா எண்ணங்களுமே நிறைவேறி விடுவதில்லை. இதற்கான காரணத்தை அறிய முயற்சிப்பதில்லை. அறிய முடிந்தாலும் தாமே குற்றவாளிகள் ஆகின்றார்கள்.

சுகமான வாழ்விற்கான எண்ணங்கள் மனம் நிரம்ப இருந்தும் பிறருக்கு செய்ய, பிறர் செய்த தீய செயல் பற்றிய எண்ணங்களே அதிகமாக மனதில் குடிகொண்டு இருப்பதனாலும் இவற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதனாலும், தீய எண்ணமே செயலில் விளைகின்றது.

இவ்வாறான தீய நோக்குடைய எண்ணங்களைத் தவிர்த்து எதிரியாக இருந்தாலும் நலமான சுக வாழ்வு வாழ வேண்டும் என எண்ணுவதால் எண்ணுவோர்க்கு நிச்சயம் நலமான சுக வாழ்வு மலரும்.

ஒருவர் தீங்கிழைத்தால் தன் மனத்தில் அதற்குரிய தண்டனையைப் பெறுவார் என்பதும் தெளிவாகும்.

நாம் நல்ல ஆரோக்கியமான எண்ணங்களை மனதில் வைத்திருப்பதோடு இல்லாமல் இவ் எண்ணங்களை ஊக்குவிக்கும் எண்ணங்களையும் மனத்தில் வளர்த்துக் கொள்ள வேண்டும். இதனை நூறு ஆண்டுகளுக்கு முன்னர் சுவாமி விவேகானந்தர் நேர் சிந்தனை என்னும் தலைப்பில் விளக்கியுள்ளார் அதன் விளக்கம்வருமாறு:

மனதில் பிறருக்கு தீங்கு விளைவிக்காத எண்ணங்களுடன் இருந்தால் கஸ்டம் நேரிடாது, என்று எண்ணுவதிலும் பார்க்க மனதில் பிறருக்கும் நன்மை விளைவிக்கும் எண்ணத்துடன் இருப்பதால் சுகவாழ்வு நிச்சயம் என்று எண்ணுவதே நேர் சிந்தனை முறையில் எண்ணுவதாகும்.

ஒரு சிந்தனைக்கு எவ்வளவு முக்கியத்துவம் மன அளவில் கொடுக்கின்றோமோ அதற்கு ஏற்றது போலவே அந்தச் சிந்தனைக்கு, செயல் தீவிரமாகும். செயலில் தீவிரம் இருந்தால் மட்டுமே எண்ணுவதெல்லாவற்றிலும் வெற்றி உண்டாகும்.

இவற்றை எல்லாம் மனதில் கொண்டு இறுதிக்கட்டத்தை அடைந்து விட்ட எமது விடுதலைப் போராட்டத்திற்கு நேர் சிந்தனை ரீதியான பங்களிப்பை வழங்குவதன் மூலம் விரைவில் வெற்றியை அடைவோம் என தமிழீழ மக்கள் ஒவ்வொருவரும் மனதில் உறுதி எடுத்துக் கொள்வோம்.

— குருவி

### படுத்துறங்கும் நேரம் இதுவல்ல...

'இடிமுழக்கம்' தாக்குதலின் பெயராம்
எடுப்பதுவோ மக்களது உயிராம்
முடிவினிலே இப்புலியர்
மூச்சடங்கப் போவதுமெய்,
விடிவு வரும் வேங்கையணி புயல் ஆம்!

அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர்
அத்தனையும் பொன்விளையும் முத்தூர்
நச்சுமதி படைத்த வெறி
நாய்களுக்கென்ன தங்குமடம்?
பிய்த்தெறிய வேங்கையின்கை பற்று!

சிங்களரின் படையணியோ கொள்ளை
தினமிங்கு புரிவர் கொலை, கொள்ளை
எங்களருந் தாயகத்தை
ஈனர் சிதைத் தழிப்பதுவோ...?
பொங்கு களமாடு முடி தொல்லை!

'ஆட்டிலறி பீரங்கி' முழக்கம்!
ஆ...... மனித உடல்களையே பிளக்கும்
நீட்டி நிமிர்ந்துறங்குகின்ற
நேரமல்ல வீறுடனே
வேட்டொலி செய், வீணர்படை பறக்கும்

இனஞ் சொரியும் மாவீரர் ஈகம்
தேசமதன் விடியலுக்கே ஆகும்,
மனங்களிலே அப்புனித
மாமணிகள் தான் சுமந்த
கனவுநன வாக்க நீ கொள் வேகம்

நிலா தமிழின்தாசன்

# கிராமிய நிதியமும் சுயதொழில் ஊக்குவிப்புக் கடன் திட்டமும்!

கடந்த இரண்டு தசாப்தங்களாக நடைபெற்று வரும் எமது தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் இன்று அதி உன்னத வளர்ச்சி கண்டுள்ளது. இது விடுதலையை மையமாகவைத்து நடைபெறும் போர் என்பது மட்டுமல்லாது பல்வேறு துறைகளிலும் விருத்தியடைந்து, விடுதலையடைந்த ஒரு சுதந்திரமான ஒரு தமிழீழமாக மலரவேண்டுமென்பதே இலக்காக இருக்கிறது. இந்தவகையிலே இப்போரிலே பங்கு கொண்டுநிற்கும் எமது மக்கள் மீது பொருளாதாரத் தடை மற்றும் அத்தியாவசிய பொருட்களின் தடை என்பவற்றை விதித்தது ஸ்ரீலங்கா அரசாங்கம். இந்த நோக்கத்தை ஏற்கனவே அறிந்துகொண்ட எமது தேசியத் தலைவர் அவர்கள் தமிழீழமானது ஒரு தனித்துவம் மிக்க பொருண்மிய கட்டமைப்பு உடையதாக இருக்க வேண்டுமென்பதை திட்டமிட்டு, அதனை நோக்காக கொண்டு செயற்படுவதற்கென தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் என்ற அமைப்பை உருவாக்கினார். இன்று இவ் அமைப்பின் மூலம் பாரிய பல வேலைத்திட்டங்கள் நடைபெறுவதுடன், தமிழீழ பொருண்மியம் மேம்பாடும் அடைந்து வருகிறது.

இந்த வகையான வேலைத்திட்டங்களில் ஒன்றுதான் சுயதொழில் ஊக்குவிப்புக் கடன் திட்டம். இத்திட்டமானது தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக் குழு பகுதியினால் கிராமிய நிதியம் என்ற பெயரில் செயற்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் கிராமத்திலுள்ள, வறுமையை அனுபவிக்கின்ற மக்கள் பலர் நன்மையடைந்து வருகின்றனர். எந்தவொரு தேசமும் பொருண்மியத்தில் தன்னிறைவடைந்து கொள்ள வேண்டுமெனில், அந்தத் தேசத்திலுள்ள ஒவ்வொரு தனிமனித பொருண்மியமும் சிறப்பாக இருக்கவேண்டும். வறுமை என்று விருத்தியடையாது, வறுமையை வெல்ல இருக்கின்ற வளங்களின் பயன்பாட்டின் மூலம் முயற்சி செய்ய வேண்டும். இதற்கு கிராமிய நிதியம் மிகச் சிறப்பாக பங்களிக்கின்றது. இந்த கிராமத்திலுள்ள ஏழை, எளிய பாமர மக்களுக்கு கூடுதலான பலனைக் கொடுத்து வருகின்றது.

இந்தவேளையில் அரச வங்கிகள் அவ்வாறான உதவிகளை செய்யவில்லையா என்பதனையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். அரச வங்கிகளாவது இவ்வாறான கடன் திட்டங்களை அரச ஊழியர்களுக்கு வசதி படைத்தவர்களுக்கும், பெரும் வியாபார முதலாளிமார்களுக்கும், தனது வாடிக்கையாளர்களுக்கும் வழங்கி வருகின்றது சுகமாக மீளறவிடு செய்கின்றது. திரும்பவும் அதே வகையானவர்களுக்கு கடனை வழங்குகின்றது. இங்கு பயன் பெறும் கடனாளிகளுள் கிராம மட்டத்திலுள்ள பாமர மக்கள் அடங்க மாட்டார்கள். ஏனெனில் அரச வங்கிகள் எதிர்பார்க்கும் ஒரு கடனாளிக்குரிய தகுதியோ அல்லது பிணை வழங்கும் தகுதியோ கிராமிய மக்கள் மத்தியில் இல்லை. எனவே கிராமிய மக்கள் இங்கு தவிர்க்கப்படுகின்றனர். இதனால் கிராமிய மக்களின் பொருண்மியம் தழைத்தோங்க சந்தர்ப்பமோ வழிவகையோ இல்லை.

இவற்றைக் கருத்தில் கொண்டே கிராம மக்கள் மத்தியில் கிராமிய நிதிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இருக்கின்ற வளங்களைக்கொண்டு மேற்கொள்ளக்கூடிய சுயதொழில்களை மேம்படுத்தும் நோக்குடனும், அல்லது புதிதாக ஒரு தொழிலை மேற்கொள்ளவும் இக்கடன் வழங்கப்படுகிறது. இது தேவைக்கேற்றவாறு பணமாகவும் உள்ளீடுகளாகவும் வழங்கப்படுவதுடன், தொழில் விருத்திகள் மேற்பார்வை செய்யப்படுகின்றது. துறைசார்ந்தவர்களின் ஆலோசனைகளும் வழங்கப்படுகிறது.

கிராம ரீதியாக இயங்கும் கிராமிய உற்பத்திக் குழுவினர் தகுந்த முறையில் பயனாளிகளை தெரிவு செய்கின்றனர். வறுமைக் கோட்டின் அடிப்படையிலும் தொழில்சார் திறமைகளையும்கொண்டு தெரிவு செய்யப்படும் பயனாளிகளுக்கு பயிற்சி வகுப்புகளும் நடாத்தி ஊக்குவிக்கப்படுகின்றது. இக்கடன் திட்டம் மூலம் பயனாளிகள் தொழில் வாய்ப்பைப் பெறுவதுடன், அவர்களது வாழ்க்கைத்தரம் உயர்த்தப்படுவதுடன் அவர்களுக்கு என்று ஒரு சேமிப்புத் திட்டம் ஆரம்பிக்கப்படுகின்றது. இத்தகைய சேமிப்பின் மூலம் பயனாளிகள் பெற்ற கடன் மீள ஒப்படைத்த காலத்தின் பின் பயன்பெற வாய்ப்புண்டு.

கால்நடை வளர்ப்பு, விவசாயம், மீன்பிடி, கைத்தொழில், வியாபாரம் போன்ற தொழில்களுக்கு இத்தகைய கடன்கள் வழங்கப்படுகின்றது. இதன் மூலம் இவர்கள் தமது சொந்தக் கால்களில் தங்கிநின்று அச்சமற்ற பிச்சையற்ற ஒரு வாழ்வினை வளமோடு பெறுவதற்கு வாய்ப்பளிக்கப்படுகின்றது இதன் மூலம் முன்னர் குறிப்பிட்ட தனிமனித பொருண்மியம் வலுப்பெற வளர்ச்சியடைகின்றது. ஒவ்வொரு தனிமனித பொருண்மிய வளர்ச்சியின் பயனாக அக்கிராமத்தில் பொதுவேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு கிராமம் அபிவிருத்தியடைந்து கிராமிய பொருண்மியம் வலுப்பெறுகின்றது. அதன் பயனாக நகரமும், நாடும் விரைவான பொருண்மிய வளர்ச்சி காணவும், அபிவிருத்தியடையவும் வழி செய்யப்படுகின்றது. இத்தகைய நோக்கங்களுக்கும், திட்டங்களுக்கும் இக்கிராமிய நிதியத்தின் மூலமான சுயதொழில் ஊக்குவிப்புக் கடன் திட்டம் தகுந்த முறையில் பெரிய அளவிலான பங்கை வகிக்கின்றது.

இக்கடன் திட்டத்தின் பெறுபேறாக பயனாளிகளிடமிருந்து கடன்கள் மீளப்பெறப்பட்டு முடிந்ததும் அதே கிராமம், அதே மாவட்டத்திலுள்ள ஏனைய பயனாளிகளுக்கும் இக்கடன் வழங்கப்படுகின்றது. இதன் மூலம் அக்கிராமத்திலுள்ள அல்லது மாவட்டத்திலுள்ள பொருத்தமான அனைவரும் பயன் பெறுகின்றனர்.

றது இக்கடனாவது ஒழுங்கான முறையில் மீளறவிடு செய்தலும் சுழற்சி முறையில் மீண்டும் வழங்குதலும் நடைபெறுகின்றது.

இந்த வகையான கடன் திட்டங்களுடன், மாவீரர் சோலை முதலீட்டுத் திட்டத்தின் மூலமான சேமிப்பு வசதிகளையும், ஏனைய சேமிப்புத் திட்டங்களையும் ஏற்படுத்தியுள்ளமை கிராமிய நிதியத்தின் சிறப்பு அம்சங்களில் ஒன்றாகும். இத்தகைய திட்டங்கள் மூலம் பலர்பயனடைய வாய்ப்புண்டு.

எனவே மொத்தத்தில் கிராமிய நிதியம் என்பது மிக முக்கியமானதொன்றாக கருதப்படுவதுடன் கிராமிய ரீதியாக மக்களுக்கு சேவையாற்றுகின்ற ஒரு இணைப்பாக விளங்குகின்றது. எனவே கிராமிய நிதிய திட்டங்களில் பங்கு கொள்வதும், இணைவதும் எமது நாட்டின் பொருண்மிய விருத்தியை ஏற்படுத்துவதற்கும்' உற்பத்தியை அதிகரிப்பதற்கும் உந்துசக்தியாக இருக்கும். இதன் மூலம்

| மாவட்டம் | பயனடையும் குடும்பங்கள் | வழங்கப்பட்ட தொகை |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 2865 | 2, 62, 37, 867. 00 |
| கடற்புலிகள் | 171 | 11, 55, 000. 00 |
| வன்னி | 3804 | 4, 40, 55, 082. 00 |
| முல்லை | 928 | 73, 81, 000. 00 |
| மன்னார் | 777 | 69, 21, 000. 00 |
| மொத்தம் | 8545 | 8, 57, 49, 949: 00 |

இந்தவகையில் இத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட கடன் விபரங்களை அவதானிக்கும்போது, கடந்த 13-03-1993 இல் இருந்து 30-11-1994 வரையான காலப்பகுதியில் யாழ், வன்னி, முல்லை, மன்னார் கடற்புலிகள் மாவட்டங்களில் சுமார் 8545 குடும்பங்களுக்கு சுமார் 8,57,49,949/- ரூபா கடனாக வழங்கப்பட்டிருக்கி

நாம் எமது விடுதலைப் போரில் வெற்றி கொண்டு விடுதலை பெற்ற நாடாக விளங்கும் போது, தன்னிறைவான பொருண்மியம் கட்டமைப்புள்ள நாடாகவும் எமது நாடு விளங்கும் என்பதில் ஐயமில்லை

**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்**

# பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆயுத உதவி நிலைமையைச் சமாளிக்க இந்தியா தயார்

(புதுடில்லி)

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆயுத விநியோகத்தை மீண்டும் தொடங்குவதால் ஏற்படும் நிலைமையைச் சமாளிக்க முப்படைகளுக்கும் தேவையான நிதி வழங்கப்படுமென இந்திய பாதுகாப்புத்துறை இணையமைச்சர் மல்லிகா அர்ஜுன் புதுடில்லியில் தெரிவித்தார்.

இராணுவத் தளபதிகளின் மாநாட்டில் உரையாற்றும் போது இந்த தகவலை அவர் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் பேசுகையில்:- பாகிஸ்தான் நீர்மூழ்கிக் கப்பலிலிருந்து ஏவுகணை செலுத்தும் திறனைப் பெறுவது 3 சி ஏசியன் ரக விமானங்களை வாங்குவது ஆகியவற்றை நாம் கவனத்தில் கைக்கொள்ளவேண்டியுள்ளது.

பாகிஸ்தான் வாங்கும் ஆயுதங்கள் எல்லாம் பெரும்பாலும் இந்தியாவுக்கு எதிராகத்தான் பயன்படுத்தப்படுகிறது என்பதை வரலாற்று அனுபவம் எடுத்துக்காட்டுகிறது.

கிருஷ்ணா என்ற கடேற்றுகளுக்கான பயிற்சிக் கப்பலை வாங்குவதற்கும் கார்வாரில் 3-வது கடற்படைத் தளத்தை அமைப்பதற்கும் அரசினால் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

கடற்படை அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்க கண்ணூர் அருகே கடற்படை அகடமி ஒன்றை அமைப்பதற்கும் எண்ணைக் கப்பலை வாங்குவதற்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

ஹரியர் ரக விமானங்களின் பராமரிப்புக்கான வசதி ஏற்படுத்தப்படும். விசாகப் பட்டினம், பம்பாய் கடற்படை கப்பல் கட்டும் கூடங்களில் ஆயுதம் பழுதுபார்க்கும் வசதிகள் ஏற்படுத்தப்படும் என்றும் கூறினார்.

விரைவுப் போர்க் கப்பல்கள் நீர்மூழ்கிக் கப்பல்கள், ரோந்துப் படகுகளைக் கட்டுவதற்கு நாட்டில் பெருமளவு வசதிகள் இருக்கின்றன. அதனை நன்கு பயன்படுத்த வேண்டும் என்று படை சாதன உற்பத்தித் துறை இணை அமைச்சர் சுரேஷ் பச்சோரியும் கூறினார்.

இந்தியாவுக்கு தேவையான அயுதங்களுக்கு ஏனைய நாடுகளை சார்ந்திருப்பது ஆபத்தானது எனவும் அமைச்சர் கூறினார். (கே-சி-மீ)

# பத்து லட்சம் தொழிலாளர் பிரான்ஸில் ஆர்ப்பாட்டம்

(பாரிஸ்)

பிரான்ஸ் நாட்டில் தனியார் நிறுவனங்களில் வேலை செய்யும், சுமார் பத்து லட்சம் தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரி பாரிஸ் நகரில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடாத்தினார்கள்.

இந்த ஆர்ப்பாட்ட பேரணியால் பிரான்ஸ் நாட்டின் ரயில், பஸ் சேவைகள் பெரிதும் பாதிக்கப்பட்டதுடன், அரச நிறுவனங்களும் பாடசாலைகளும் மூடப்பட்டன. இந்த ஆர்ப்பாட்ட பேரணிக்கு பிரான்ஸ் நாட்டின் அனைத்து பத்திரிகைகளும் முக்கியத்துவம் கொடுத்து செய்திகளை வெளியிட்டிருந்தன.

இப் பேரணியில் அசம்பாவிதங்கள் ஏற்படலாம் என்பதற்காக இராணுவமும், பொலிஸாரும் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. வி-ரி

## கடன் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களை மேம்படுத்தும் முகமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக் குழுவினர் கிராமிய நிதியங்கள் மூலம் ஊக்குவிப்பு கடன்களை வழங்கி வருகின்றது.

அண்மையில் கொக்குவில் கிழக்கிலுள்ள வளர்மதி சன சமூக நிலையத்தில் ஒரு பயனாளிக்கு 3000ரூபாவீதம் 4பயனாளிக்கும் 12000 ரூபாவை கிராமிய உற்பத்திக் குழுவினர் வழங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. மி

## இடமாற்றம்

(மானிப்பாய்)

யாழ் செயலகத்தில் கணக்காளராக கடமையாற்றிய திரு ரி.சுதந்திரபாலன் கடந்த 1ம் திகதி முதல் யாழ் கல்வித் திணைக்களகணக்காளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். 71-இ

# குமுழமுனையில் நெய் உற்பத்தி நிலையம்

(யாழ்ப்பாணம்)

முல்லை மாவட்டம் குமுழமுனைக் கிராமத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன விலங்கு வேளாண்மைப் பகுதியினர் நெய் உற்பத்தி நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர். இதன் மூலம் பயன்படுத்தப்படாது வீணாகும் பாலில் ஒரு பகுதியை நெய் உற்பத்திக்கு பயன்படுத்தி வருவதாகவும் இந்த நிலையத்தில் நாளாந்தம் 200 லீற்றர் எருமைப்பாலிலும், 200 லீற்றர் பசுப்பாலிலும் ஆடை பிரி கருவி மூலம் வெண்ணை பிரிக்கப்பட்டு நெய் உற்பத்தி செய்யப்படுகிறது.

மேலும் இங்கு உற்பத்தி (5ம் பக்கம் பார்க்க)

# தேசிய பாதுகாப்பு நிதி பற்றிய கலந்துரையாடல்

சங்கானை வட்டத்தைச் சேர்ந்த பின்வரும் கிராம சேவகர் பிரிவில் நடைபெறவுள்ள தேசிய பாதுகாப்பு நிதி பற்றிய கலந்துரையாடலில், இதுவரையில் ஒப்புதல் அளிக்காதவர்களைக் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| வட்டு: மேற்கு | — | 13-10-95 (வெள்ளி) திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் 9-00 — 5-00 மணி |
| வட்டு: தெற்கு, வட்டு: தென் மேற்கு | | 14, 15 (சனி, ஞாயிறு) திருஞானசம்பந்தர் வித்தியாலயம் 9-00 — 5-00 மணி |
| பொன்னாலை | — | 13 (வெள்ளி) மூளாய் அ மி த க. பாடசாலை 9-00 — 5-00 மணி |
| மூளாய் | — | 14, 15 (சனி, ஞாயிறு) மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் 9-00 — 5-00 மணி |

## குமுழமுனையில்

[4ம் பக்கத் தொடர்ச்சி]

செய்யப்படும் நெய் மற்றும் ஆடை நீக்கிய பால் மக்களின் பாவனைக்கு விநியோகிக்கப் படுவதும் குறிப்பிடத்தக்கது.

-நி

# இராசி பலன்

13-10-1995

வெள்ளிக்கிழமை

[தமிழுக்கு புரட்டாதி 26[

பஞ்சமி மு. இ. 3.19 வரை, ரோகினி முன்னிரவு 10.12 வரை, மரணயோகம், இராகு காலம் காலை 10.32 முதல் 12.02 வரை, சுபவேளை காலை 6.02 முதல் 7.32 வரை:

மேஷம்: கடினவாக்கு, அமைதியின்மை, யோசனை.

இடபம்: தொழில் சிறப்பு, சுபகாரியம், பயணம்.

மிதுனம்: பெற்றோர் கோபம், தவறிழைத்தல், அச்சம்.

கடகம்: சமரசம் பேசுதல், முயற்சி பலிதம், பணவரவு.

சிங்கம்: விருந்தினர் வருகை கடமையுணர்வு, பதவிமாற்றம்.

கன்னி: மனப்பதட்டம், ஏமாற்றம், தொழில்பகை.

துலாம்: வேண்டாத பகை, குடும்பபிரிவு முணு முணுத்தல்

விருச்சிகம்: இல்லச் சிறப்பு, இரகசிய சந்திப்பு, தெய்வசிந்தனை.

தனுசு: தாமதவெற்றி, கூடிப்பேசுதல், சுபச்செய்தி.

மகரம்; முயற்சித்தடை, வேண்டாத நட்பு, சுபவிரயம்.

கும்பம்: குற்ற உணர்வு, மாமனார் கவலை, வெறுப்பு.

மீனம்: நினைத்ததைச்சாதித்தல், கடினவேலை, அதிகாரிகள் அறிவுரை.

— ஜோஸ்யர்

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-10-13

வெள்ளி இரவு

8-02 கலைமஞ்சரி

1. அறிமுகம் "கச்சதீவு அன்றும் இன்றும்" ஆய்வுநூல்
2. சிறுகதை - நா. கோகுலன் எழுதிய 'தப்புக் கணக்குகள்'
3. கவிதை கா. சுஜந்தன் எழுதிய "காப்பரன்"

8-25 கணப்பொழுது

போராளி நவகரன் எழுதிய "வீரமங்கை கரிகரன்"

8-30 செய்திகள்

8-40 அரசியல் அரங்கம்

வே. பாலகுமாரன் எழுதிய "விடுதலையின் திறவுகோல்"

8-50 ஏர்முனை - நிகழ்ச்சியில் "அன்றுசிச் செய்கை" உரைச்சித்திரம்

1995-10-14

சனி காலை

7-02 மாவீரர் வணக்கம்

7-15 நீங்கள் கேட்டவை

7-30 செய்திகள்

7-35 பத்திரிகைச் செய்திகள்

8-00 மணிவரை நீங்கள் கேட்டவை

## தமிழீழவானொலி நிகழ்ச்சி நிரல்

1995-10-13

வெள்ளி மாலை

5-01 சிந்தனைச்சிதறல்

5-02 எழுச்சிகீதம்

5-10 புதியவை

5-15 கணநேரக் காவியங்கள்

5-30 மண்ணின் குரல்

5-40 நேயர் கடிதங்கள்

5-45 நாடகம்

6-00 சிந்தனைக்குச் சில வினாடிகள்

6-02 வெற்றிச் சுவடுகள்

6-10 செய்திகள்

6-15 விளையாட்டுச் செய்திகள்

6-30 மணிவரை என் தெரிவு

## தமிழ் மக்களுக்கு

[1ம் பக்க தொடர்ச்சி]

கும் தற்போதைய அரசியல்- இராணுவப் போக்குப் பற்றிய எமது துயரத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாம் இரண்டு மிக அவசரமான விடயங்களை முனைப்புறுத்திக் கூற விரும்புகின்றோம்.

★ இங்கு வாழ்கின்ற தமிழர் ஒவ்வொருவரையும் ஷெல்லாலும், குண்டாலும் பயமுறுத்துகின்ற தற்போதைய இராணுவ நடவடிக்கைகளின் அழிவேற்படுத்தும் தன்மை.

★ வட-கிழக்குத் தமிழர்களுடனும், அவர்களின் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் விடுதலைப்புலிகளுடனும் கலந்தாராயாது தமிழர் பிரச்னைக்குத் தீர்வு காணும் சாத்தியமில்லாமை.

முன்னெடுத்துப் பாய்தல் இராணுவ நடவடிக்கை எத்தனை பாரதூரமான அழிவை ஏற்படுத்தியது என்பது இன்று பலரறிந்த உண்மை. (205 மரணங்கள், 953 காயப்பட்டோர், 187589 இடம்பெயர்ந்தோர்) வரையறுக்கப்பட்ட நடவடிக்கை எனப்பட்ட டிருகன்ஃபயர் நடவடிக்கைகாரணமாக 15 பேர் உயிரிழந்தனர், 7146 பேர் இடம்பெயர்ந்தனர். இப்பொழுது இவை போதாதென்று வடமராட்சியில் பள்ளிக் குழந்தைகள் பதைபதைக்கக் கொல்லப்பட்டுள்ளனர். இது கொடுமை மிக்க ஓர் அழிவு, வடமராட்சிக் குண்டுவீச்சில் 3000குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. ஷெல் தாக்குதல் மிகக்குரூரமான கொலைச்சக்தியாக மாறியுள்ளது.

சற்றும் எதிர்பாராத நிலையில் மக்கள் தலைகளுக்கு மேல் வெடித்துச் சிதறுகிறது. இந்த மக்களின் உயிர்கள் பற்றி யோசிப்பதற்கு ஒன்றுமில்லையென்ற, எடுகோள் இல்லாத இப்படியான போரை இந்த முறையில் நடத்த முடியாது.

சமாதானத்துக்கான ஆலோசனைகள் பற்றிப்பேசும் பொழுது, வடக்கு- கிழக்குத் தமிழர் மட்டத்திலும், தமிழர்களின் பிரதிநிதிகளாகிய விடுதலைப் புலிகளாலும் கலந்தாராயப்படாத நிலையில் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்பு இருக்காது என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

இப்பொழுதுள்ள பொருளாதாரத்தடை, குண்டு, ஷெல் தாக்குதல் ஆகியவற்றுக்கிடையே மக்களால் பயனுள்ள கலந்துரையாடலினைச் செய்ய முடியாது.

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளுக்கு எதிரானவர்களல்லர். தமிழருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே வேறுபாடு கற்பிப்பது என்பதோ, தமிழரைப் புலிகளிடமிருந்து அந்நியப்படுத்துவது என்பதோ யாதார்த்த பூர்வமான ஒன்றல்ல.

எனவே நாம், முதலில் இப்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ள இராணுவத் தாக்குதல்களை நிறுத்துமாறும், வழமை நிலைக்கான சூழலை ஏற்படுத்துமாறும், தமிழ்ப் பிரச்னைக்கான அரசியல் தீர்வுக்கு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை மீளத் தொடங்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

## மகஜரில் கைச்சாத்திட்டோர்

பல்கலைக்கழகத்தை சேர்ந்த

பேராசிரியர் கா. சிவத்தம்பி (தலைவர், நுண்கலைப்பீடம்)

பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை (கலைப்பீடாதிபதி).

பேராசிரியர் அ. சண்முகதாஸ் (தலைவர், நடனத் துறை).

கலாநிதி சோ. கிருஷ்ணராசா (தலைவர், மெய்யியல் துறை).

கலாநிதி ஏ. ஜே. வி சந்திரகாந்தன் (தலைவர், கிருஸ்தவ, இஸ்லாமிய நாகரிகத்துறை).

கலாநிதி நா. சுப்பிரமணியன் (சிரேஷ்ட விரிவுரையாளர்)

ஏ. ஜே. கனகரத்தினா (விரிவுரையாளர்).

திருமதி ஏ. என். கிருஸ்ணவேணி (விரிவுரையாளர்).

செல்வி பி. சிவகப்பிரமணியம் (உதவி விரிவுரையாளர்).

திருமதி ஜி கருணாகரன் (உதவி விரிவுரையாளர்).

திரு. கே. சிதம்பரநாதன் (விரிவுரையாளர்).

செல்வி ஆர் ஜெயரஞ்சினி (உதவி விரிவுரையாளர்)

மற்றும் திரு. எம். சண்முகலிங்கம் (நாடக அரங்கக் கல்லூரி).

திரு. பி. தேவானந் (சுதந்திர அரங்க நடிப்புக்குழு).

திரு க. தணிகாசலம் (தேசிய கலை, இலக்கியப் பேரவை).

திரு. டொமினிக்ஜீவா (தமிழ்எழுத்தாளர்ஒன்றியம்)

திரு. வி. ஜே கொன்ஸ்டன்ரைன் (யாழ் திருமறைக் கலாமன்றம்).

செல்வி கே. லோசனா (மகளிர் நடவடிக்கை குழு).

திரு. பிரசாந்தன் (அகில இலங்கை கம்பன் கழகம்).

திரு ஏ. ரி பொன்னுத்துரை (குரும்பசிட்டி சன்மார்க்கசபை),

திருமதி. கோகிலா மகேந்திரன் (கலை, இலக்கிய களம்). இ

## திருவாசகம்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

லைப் பொதுவினுள் திருவருள் இன்பம்துய்க்கப் பட்டவர்.

"திருந்திய அன்பின் பெருந்துறைப் பிள்ளை"யாகிய மாணிக்கவாசகப் பெருமான் அருளிச் செய்த திருவாசகத் திருமுறையைச் சைவத் தமிழ் அன்பர்கள் கற்றுப் பேரின்பம் அடையவேண்டும்.


உ

சிவமயம்

# இதோ உதயமாகின்றது

வைரவரின் துணையோடு வளமுடனே வளர்ந்திடவே வந்திங்கு ஆடுகின்றனர்

★ வைரவர் விளையாட்டுக் கழகம் ★

வந்தனங்கள் பல கூறி வளர்ந்திடும் கழகத்தை வரவேற்று மகிழ்ந்திடுவீர்

## அணி வீரர்கள்

★ ஆ. மதிசூடி
★ பொ. ஹேமசபேசன்
★ இ. யசிகரன்
★ தெ. சஜீவ்
★ சு. சுதர்ஜெனன்
★ இ. நிஷாந்தன்
★ ம. சுகுமார்
★ அ. நாகேஸ்வரன்

வாழ்த்துவோர்

நலன் விரும்பிகள்

[சி 1708]

# உணவுப் பொருட்கள் அனுப்புவது பற்றி கொழும்பிலிருந்து தகவல் எதுவுமில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிற்கு உணவுப் பொருட்களை கப்பலில் அனுப்பி வைப்பது குறித்த தகவல்கள் எதுவும் நேற்று மாலைவரை யாழ். செயலகத்திற்கு கொழும்பிலிருந்து கிடைக்கவில்லை என்று செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ் குடாநாட்டில் உணவுப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் உணவுப் பொருட்களின்றி மக்கள் பட்டினி விளிம்புக்கு தள்ளப்பட்டுள்ளார்கள் எனவும் ஆகையினால் உணவுப் பொருட்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு யாழ் செயலக திட்டப்பணிப்பாளர் கொழும்பில் இருக்கும் யாழ் அரச அதிபருக்கு கடந்த செவ்வாய்க்கிழமை அனுப்பி வைத்துள்ள செய்தியில் கேட்டிருந்தார்.

ஆனால் நேற்று மாலைவரை யாழ். அரச அதிபரிடம் இருந்து இதற்கான பதிலோ உணவுக் கப்பல் வருவதுபற்றி செய்தியோ செயலகத்திற்கு கிடைக்கவில்லை என்றும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

170-சி

## வடமராட்சிப் பகுதியில்

(1ம் பக்க தொடர்ச்சி)

வாரம் பாரிஸில் வெளியிட்டுள்ளார் அவ்வறிக்கையில்:

எந்தவொரு உள்நாட்டுப் பிரச்சினையானாலும் பாடசாலைகள் மீது குண்டுகள் வீசப்படுவது காட்டுமிராண்டித்தனமாகும். இவ்வாறான சம்பவங்கள் எங்கு நடந்தாலும் அது கண்டிக்கப்பட வேண்டியதொரு விடயம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் யுனெஸ்கோவின் இந்த அறிக்கையை மறுத்துள்ள இலங்கை அரசு இவ்வாறு கண்டனம் தெரிவித்தமைக்காக யுனஸ்கோவிடம் தனது ஆட்சேபத்தைதெரிவித்துள்ளது. க-சி

## தமீழீழ

(1ம் பக்க தொடர்ச்சி)

பேறுகளைக் கோட்டக் கல்விப் பணிமனையிலிருந்து பெற்று மாணவர்களுக்கு வழங்குமாறு தேர்வு ஆணையாளர் கேட்டுள்ளார்.

139-சி

## யாழ். நகரை

(1ம் பக்க தொடர்ச்சி)

வம் இனி எந்த நேரத்திலும் யாழ்- நகரைத் தாக்க திட்டமிட்டுள்ளது.

இதேவேளை விடுதலைப் புலிகளுக்கு எதிராக பாரிய தாக்குதலை நடாத்த இராணுவம் இரகசியமான முறையில் திட்டமிட்டு வருவதாகவும் தெரிவித்தது. சி

## வடமராட்சி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யில் முதலில் வீழ்ந்தது. இதனால் அப்பகுதியைச் சேர்ந்த சின்னவி திருச்செல்வம் (38 வயது) என்பவர் படுகாயம் அடைந்து மந்திகையில் அனுமதித்த சில நிமிட நேரத்தில் மரணமானார்.

வல்வெட்டித்துறை கம்பர் மலையில் வீழ்ந்த இரண்டாவது எறிகணையில் அருளன் பவளம் [வயது 68] என்னும் வயோதிப மாது படுகாயமடைந்து மந்திகையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இப்பகுதியில் பல கால்நடைகளும் ஷெல் வீச்சால் இறந்துள்ளன.

160-சி

## தென் ஆபிரிக்காவின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சனைகளைத் தீர்ப்பதற்கு தென் ஆபிரிக்காவை முன் மாதிரியாக எடுத்துக் கொள்ள முடியும் இதற்கு இலங்கை தென் ஆபிரிக்காவுடன் ஒரு சம்பாஷணை நடத்துவது பொருத்தம்.

இந்த நாட்டில் ஏராளமான வளங்கள் யுத்தத்தை கையாள்வதற்கு செலவிடப் படுகின்றது.

தென் ஆபிரிக்காவில் நிலவிய பிரச்சினை இதைவிடப் பாரதூரமானது. அந்தப் பிரச்சினையை நாங்கள் வெற்றி கண்டு விட்டோம். நாங்கள் எல்லாவற்றையும் இழக்க வேண்டுமென வெள்ளையர்கள் அஞ்சினார்கள். சோவியத் யூனியன் பலம் வாய்ந்ததாக இருந்தால் நாம் எதிர்காலம் இல்லாத நாடாக மாறிவிடுவோம் என்றும் அஞ்சினோம்.

தென் ஆபிரிக்கா இரத்தம் சிந்திய புரட்சியை நோக்கிச் செல்வதாக சகலரும் கருதினோம். ஆனால் நாங்கள் திசைமாற்றிவிட்டோம். எமது நாட்டின் தலைவர்களின் திறமையிலேயே அது தங்கியிருந்தது.

நீங்கள் இதற்கு முன்பு அன்னியோன்னியமாக வாழ்ந்தீர்கள், தென் ஆபிரிக்கா போன்ற வரலாறு உங்களுக்கில்லை. எனவே பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்கு தீர்வுகாணலாம் என எண்ணுகிறேன் என்றார்.

170-சி

# தொண்டமானாறு நோக்கி பலத்த ஷெல் வீச்சு

(வடமராட்சி)

வளலாயில் நிலைகொண்டுள்ள படையினர் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய சுற்றாடலை நோக்கி மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் ஒருவர் காயமடைந்தார். ஆலய மடம் உட்பட மக்கள் குடியிருப்புக்களும் சேதமடைந்தன.

நேற்று முன்தினமிரவு 11-15 மணியளவிலேயே வளலாய் படையினர் தொண்டைமானாறை நோக்கி அகோர ஷெல் தாக்குதலை நடாத்தினர்.

இச்ஷெல்கள் சந்நிதியான் ஆச்சிரம பகுதியில் வீழ்ந்து வெடித்த போது அங்கிருந்த கெருடாவிலைச் சேர்ந்த கதிரவேல் தர்மலிங்கம் (வயது-50) என்பவர் படுகாயமடைந்து வல்வெட்டித்துறை அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத்தாக்குதலினால் வீரகத்திப் பிள்ளையார் வித்தியாலயம். ஆச்சிரம பகுதி மற்றும் பல குடியிருப்புக்களும் சேதமடைந்தன.

51-சி

# மரண அறிவித்தல்

## கந்தையா தர்மரத்தினம்

தொல்புரம் மத்தியைச் சேர்ந்த கந்தையா தர்மரத்தினம் [இளைப்பாறிய அதிபர் - தொல்புரம் அ.மி. த. க. பாடசாலை] நேற்று [12-10-95] காலமாகி விட்டார். அன்னார் செல்வேஸ்வரியின் [இளைப்பாறிய ஆசிரியை - தொல்புரம் அ. மி. த. க. பாடசாலை], அன்புக் கணவரும், யோகேந்திரன் [ஜேர்மனி], இந்திரா [சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஆசிரியை]. ஞானேந்திரன் [பிரான்ஸ்], தவேந்திரன் [ஜேர்மனி], காலஞ்சென்ற புவீந்திரன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், இன்பா [ஜேர்மனி], தவநாயகம் [இலங்கை வங்கி - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்], கவிதா [பிரான்ஸ்] ஆகியோரின் அன்பு மாமனாரும், இன்பயோகி [ஜேர்மனி] டினுஷா, சில்வியா, தர்சன் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், அருமைநாயகம் [இளைப்பாறிய தபால் அதிபர்], காலஞ்சென்ற பாலசுந்தரம் ]இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்] சற்குணதேவி [கனடா], தேவராஜமலர் [யாழ் பாணம்] ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை தொல்புரம் மத்தியில் உள்ள அவரது இல்லத்தில் [நேற்று] 12-10-95 வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
இந்திரா தவநாயகம்
[மகள்]

"புவி வாசா"
தொல்புரம் மத்தி,
சுழிபுரம்.

(சி 1707)

# காசுக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

கீழ்க் குறிப்பிட்டுள்ளோருக்கான ஒரு தொகை காசு எம்மிடம் உள்ளது. அனைவரையும் இன்று வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு கன்னாதிட்டி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு அடையாள ஆவணங்களுடன் வருகைதந்து காசைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

திருமதி எம். தங்கவடிவேல் கோயிலாமனை மீசாலை வடக்கு கொடிகாமம்.

பூமணி பூமலர்) கணேஸ்வரன் புத்தூர் கிழக்கு புத்தூர்

ரீ இளையதம்பி மருத்தித்துறை வீதி, ஆவரங்கால் புத்தூர்

மேரீஸ்ரேலா திருச்செல்வம் லூர்திமாலா லேன் 39/4 நியூ ரோட் கொய்யாத் தோட்டம்

சி

## முதலுதவிப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

அரசசார்பற்ற நிறுவனங்களின் அவசரகால முதலுதவிச் சிகிச்சைப் பிரிவின்கீழ் போர்க்கால முதலுதவிப் பயிற்றுனர் பயிற்சிபெற்றோருக்கா விசேட ஒன்றுகூடல் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3-00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும்.

புதிய விண்ணப்பதாரர்களுக்கான பயிற்றுனர் பயிற்சி 14ம் 15ம் திகதி ஆகிய இரு நாட்களும் காலை 8-30 மணி முதல் 2-00 மணிவரை யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறும். சி

## கொழும்பின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடந்த டக்ளஸ் தேவானந்தா மீதான தாக்குதலின் பின்பே பாதுகாப்பு இந்தளவுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாம். -சி

## அரச வைத்தியர்கள்

(1ம் பக்க தொடர்ச்சி)

வேண்டாமெனவும் பேச்சுக்களுக்கு வருமாறும் கூறியுள்ள சுகாதார அமைச்சர் பௌஸி மனிதாபிமானமற்ற செயலில் ஈடுபட வேண்டாமென்றும் வைத்தியர்களை கேட்டுள்ளார். சி

## டக்ளஸ்

(1ம் பக்க தொடர்ச்சி)

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்: இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு 200 பொலிசார் விசேடமாக நியமிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு சந்தேக நபர்கள் பயணம் செய்த வானை கண்டு பிடிக்க விசேட முயற்சி மேற்கொள்ளப்படும்.

57 தொடர் இலக்கத்தில் ஆரம்பிக்கும் நிஷாம் பெனற் தொடர் இலக்கமுடைய வான் இம்மாதம் 9ம் திகதி இரவு 9 மணி தொடக்கம் 11 மணி வரை ஹவ்லொக் ரவுண், வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, ஆகிய பகுதிகளில் நடமாடியது.

குறிப்பிட்ட வான் கடும் பச்சைநிறமும் மண்ணிறத்தையும் கொண்டதாகும். நாட்டில் இது போன்று 60வான்கள் உண்டு. அவற்றில் 50வான்கள் கொழும்பிலுள்ளவர்களுக்கே சொந்தமானதென்றும் தெரிவித்துள்ளார். க-சி

## சட்டக்கல்லூரி மாணவர்களுக்கு

[யாழ்ப்பாணம்]

தமிழீழ சட்டக்கல்லூரிக்கு தெரிவுசெய்யப்பட்டோர் எதிர்வரும் 18- 10- 95 காலை 10 மணிக்கு சங்கிலியன் வீதியிலுள்ள மேன்முறையீட்டு நீதிமன்றில் சமூகமளிக்கும் படி வேண்டப்படுகின்றனர். சி

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தேசிய பாதுகாப்பு நிதிக்கு பங்களிக்காத, இதுவரை ஒப்புதலளிக்காத மணியந்தோட்டம் அரியாலைப்பகுதி மக்களில் ஜே/ 90 முதல் ஜே/ 96 வரையான கிராம சேவகர் பிரிவுகளில் வாழுகின்ற நிரந்தர, இடம் பெயர்ந்த மக்கள் அனைவரும் தங்கள் குடும்ப உறுப்பினர் ஒருவரை இன்று வெள்ளிக்கிழமை மாலை 3-00 மணிக்கு அரியாலை ஸ்ரீ பார்வதி பாடசாலையில் நடைபெறும் கலந்துரையாடல் நிகழ்விற்கு கலந்து கொள்ள செய்யுமாறு தேசிய பாதுகாப்பு நிதி தொடர்பகத்தினர் வேண்டுகின்றனர். க-சி

# எதிரிகளை திசை திருப்பவே சந்திரிகா யுத்தத்தை தீவிரப்படுத்தியுள்ளார்

## வெரித்தாஸ் விமர்சனம்

(கொழும்பு)

ஜனாதிபதி திருமதி சந்திரிகாவுக்கு இதுவரை காலமும் இலங்கையில் எந்த ஒரு அரசியல் தலைவர்களுக்கும் வழங்கப்படாத பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என்று வெரித்தாஸ் தெரிவித்தது.

வெரித்தாஸ் மேலும் தெரிவித்துள்ளதாவது:- ஜனாதிபதியின் உயிருக்கு எந்த நிமிடத்திலும் ஆபத்து ஏற்படலாம் என்பதற்காக அவரைச் சுற்றி இரவு பகலாக 750 க்கும் அதிகமான பாதுகாப்பு ஊழியர்கள் விழித்த கண் மூடாமல் காவல் காத்து வருகின்றார்கள்."

அந்நிய சக்திகளால் தன் உயிருக்கு ஆபத்து ஏற்படுவதைக் காட்டிலும் தன் இனத்தாலும், தன் உற்ற உறவுகளாலுமே தன் உயிருக்கும், தன் பிள்ளைகளின் உயிருக்கும் கூடுதலாக ஆபத்து உண்டு" என ஜனாதிபதி சந்திரிகா தன்னைச் சுற்றியுள்ள சிலரிடம் அண்மையில் கூறியுள்ளார்.

இதன் நிமித்தமே ஜனாதிபதி சந்திரிகா கடந்த மாதத்திலிருந்து பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதைக் கூடுதலாக தவிர்த்து வருகின்றார். இவரின் பாதுகாப்புக்காக இவரது அலுவலகத்தை சுற்றி ஒவ்வொரு மூன்று மீட்டர் தூரத்துக்கும் நவீன ஆயுதங்களை தாங்கிய படையினர் காவல் புரிகின்றனர். இவரின் அலுவலகத்துக்கு பின்புறமுள்ள வீதி பொதுமக்களின் பாவனையின்றி மூடப்பட்டு விட்டது. முன்புறமுள்ள காலி வீதி, தினமும் இரவு வேளையில் பாதுகாப்பு ஒத்திகைக்குள்ளாகின்றது.

ஆபத்தையும், அபாயத்தையும் எந்த நேரத்திலும் எதிர்நோக்கியவாறு ஜனாதிபதி சந்திரிகா காலத்தைக் கழிப்பதினால் இதைப் பார்க்கும் அவரின் நெருங்கிய அமைச்சர்களுக்கும் தற்போது பெரும் பீதி ஏற்பட்டுள்ளது. இவ்வாறான மரணப் பீதியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்காகவும் தன்னை சுற்றியுள்ள எதிரிகளின் திசைகளை வேறு பக்கம் திருப்பும் முகமாகவும் வடபகுதி மீதான தாக்குதலை ஜனாதிபதி சந்திரிகா தீவிரப்படுத்திவிட்டுள்ளார். -வி-ரி

பொருண்மியத்தில் புது எழுச்சி காண மனை எங்கும் பனையாட்சி செய்வோம்!

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683618.